### அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள

# கூட்டாட்சியியலை நிலைநிறுத்துவதற்கு தேவையானவற்றை மேற்கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 27-

இந்த அரசியலமைப்புச் சட்ட நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**இந்தியா என்பது ஒரு பண்பாட்டுக்கோ ஒரு கருத்தியலுக்கோ மட்டுமானதல்ல, அதன் மக்கள் அனைவருக்குமானது. பாபாசாகேப் அம்பேத்கரின் இந்த பரந்த பார்வையைச் சுருக்க முயற்சிக்கும் அனைத்து சக்திகளுக்கும் எதிராகப் போராடும் நமது மனவுறுதியை இந்த அரசியலமைப்புச் சட்ட நாளில் மீண்டும் உறுதிகூறுகிறோம்.**

**நமது அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கூட்டாட்சியியலை நிலைநிறுத்தவும், அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கவும் தேவையான அனைத்தையும் மேற்கொள்வோம்.**

**நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து நமது குடியரசைக் காப்பதே அரசியலமைப்புச் சட்டத்துக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதை!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்..


THE PREAMBLE
WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression, belief, faith and worship;
EQUALITY of status and of opportunity; and to promote among them all
FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

# குஜராத்திகளுக்கு இந்திமொழி வெளிநாட்டு மொழியாகும்!

## குஜராத் உயர்நீதிமன்றம் அறிவிப்பு!

அகமதாபாத், நவ.27-

குஜராத் மாநில மக்களுக்கு இந்தி மொழி அந்நியமொழி (வெளிநாட்டு மொழி) என்று குஜராத் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநில அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் கூட குஜராத் மொழிதான் கற்பிக்கப்படுகிறது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தி மொழியில் அறிவிக்கை ஒன்றை வெளியிட்டதை எதிர்த்து ஜுனாகந்த் விவசாயிகள் தொடர்ந்த வழக்கில் நடைபெற்ற விவாதத்தின் போது மேற்கண்ட கருத்தை உயர்நீதிமன்றம் வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டு இந்திய. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்கனவே உள்ள இருவழிப்பாதையை 4 வழிப்பாதையாக மாற்ற திட்டமிட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் பைபாஸ் பாதை கடந்த ஆண்டு மாற்றப்பட்டது.


THE TIMES OF INDIA
CITY
Hindi is a foreign language for Gujaratis, says Gujarat high court
TNN | Jan 1, 2012, 05.34 AM IST
AHMEDABAD: The Gujarat high court has said that Hindi is a foreign language for Gujaratis. Even the state government-run primary schools teach in Gujarati, the court said.
The high court made the observations in a case filed by farmers from Junagadh objecting to the National Highways Authority of India (NHAI) publishing a notification in Hindi. In 2006, the NHAI planned to widen the existing two-lane national highway 8D to four lanes. The alignment of the bypass was changed last year on various grounds.

### தமிழ்நாட்டை இழிவுபடுத்துவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருக்கிறார் ஆளுநர் ரவி!

# தேசிய கீதத்தில் ‘திராவிடம்’ இடம் பெற்றிருக்கிறது என்பது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா?

## இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி!

சென்னை, நவ.27-

**இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (25.11.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்த கருத்துகளை மறுத்து விரிவான விளக்கத்தை அளித்தார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதியின் பேட்டி வருமாறு :-

தமிழ்நாட்டில் அவதூறு பரப்புவதற்கென்றே அனுப்பப்பட்டவர் ஆளுநர் ரவி. கமலாலயத்துக்கு அனுப்பப்படவேண்டியவர் ராஜ் பவனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். நேற்று தனியார் தமிழ் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் ஆளுநர் ரவி ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கம் போல தன்னுடைய பாணியில் பேசியிருக்கின்றார். தமிழ் கலாச்சாரம், நம்முடைய பண்பாடு, மொழி இவற்றை பற்றி எல்லாம் பேசுகின்ற ஆளுநர் ரவி அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை நாம் பார்த்தாக வேண்டும்.

**தமிழர்கள் மீதான மோடி - அமித்ஷாவின் குற்றச்சாட்டு!**

தமிழ்நாட்டை இழிவுபடுத்துவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருக்கின்ற ஆளுநர் அவர்கள் அளித்த பேட்டியில் பாஜகவின் ஊதுகுழலாக முழங்கி இருக்கின்றார்.

திராவிடம் என்பது கற்பனை, தமிழ்நாட்டில் பீகாரிகள் அச்சுறுத்தப்பட்டனர், தமிழ்நாட்டில் மொழி சிறுபான்மையினர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என பேட்டியில் கூறியிருக்கிறார். திராவிடம் என்பது கற்பனை என்று சொன்னால் நம்முடைய தேசிய கீதத்தில் திராவிடம் இடம் பெற்றிருக்கிறது என்பது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா? அல்லது வங்க மொழியிலே இருக்கிறது என்கின்ற காரணத்தால் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

அடுத்து அவர் சொல்லுகிற குற்றச்சாட்டு, பீகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். இப்படித்தான் ஒரிசாவிலே தேர்தல் நடந்தது. ஒடிசாவில் தேர்தல் நடந்த நேரத்தில் அமித்ஷாவும் மோடியும் அங்கு பிரச்சாரம் செய்கின்ற பொழுது ஒடிசாவை ஒரு தமிழன் ஆள வேண்டுமா? ஒடிசாவின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று தமிழர்களை திருடர்களைப் போல ஒரு குற்றச்சாட்டு சுமத்தினார்கள்.

தமிழர்கள் என்ன திருடர்களா? குற்றவாளிகளா? தமிழ்நாடு என்ன குற்றவாளிகள் பிறப்பிடமா? தமிழ்நாட்டிலே ஒடிசாவினுடைய சாவி இருக்கிறது என்று சொன்னால் இங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறதா? இப்படி மற்ற மாநிலங்களில் தமிழ்நாட்டைப் பற்றி பேசிவிட்டு பீகார் தேர்தலில் என்ன சொன்னார்கள்? தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பீகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிற வகையில் இருக்கிறது என்றெல்லாம் பொய்யான கட்டுக்கதைகளை அவர்கள் அவிழ்த்து விட்டார்கள்.”

வடமாநிலத்திலிருந்து அதிகாரிகள் குழு வந்து இங்கிருக்கும் பீகாரிகளிடம் ஆய்வு நடத்திய போது கூட, ”பீகாரிகள் தாக்கப்படுவதாக வீடியோக்களில் வந்ததெல்லாம் வதந்தி, நாங்கள் இங்கே நன்றாக இருக்கிறோம். நாங்கள் நன்றாக நடத்தப்படுகிறோம், எங்களுக்கு நல்ல பொருளாதாரம் கிடைக்கிறது. அதன் மூலமாக எங்கள் குடும்பத்தையே நாங்கள் காப்பாற்றக்கூடிய சூழ்நிலை எங்களுக்கு இருக்கிறது” என்று தெரிவித்தார்கள்.

எனவே எங்கு போனாலும் தமிழனுக்கு எதிராக பேசுவதை இன்றைக்கு கொள்கையாக கொண்டிருக்கக்கூடியவர்கள்தான் நம்முடைய ஆளுநரும் ஒன்றிய பாஜகவும். உடனே என்னுடைய தமிழ்ப் பற்று தெரியாதா என்பார்கள். ஆனால் தமிழ் மொழிக்காக அவர்கள் ஒதுக்கியது 150 கோடி. சமஸ்கிருதத்துக்காக அவர்கள் ஒதுக்கியது 2500 கோடி. இதுதான் தமிழ்ப் பற்றா? இதை எல்லாம் இன்றைக்கு மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் சொல்ல வந்திருக்கின்றோம்.

**மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சி!**

திராவிட மாடல் அரசு யாருக்கும் எதிரான அரசு கிடையாது. ஆளுநர் தான் தமிழ்நாட்டில் இருக்கிறேன் என்பதை மறந்துவிட்டார். தமிழ்நாட்டில் வசிக்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைப் பேசும் சிறுபான்மை மக்கள் 2024-25 கல்வி ஆண்டிலும் தங்கள் தாய்மொழியிலேயே தேர்வுகளை எழுதலாம் என்ற அனுமதியை அரசு வழங்கியது. இந்த உத்தரவு பள்ளிக் கல்வித்துறையினுடைய செயலாளர் குமரகுருவால் பிறப்பிக்கப்படது. முன்னர், 2023 ஆம் ஆண்டு வரை இந்த அனுமதி இருந்தாலும், சிறுபான்மையினர் உயர் நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அனுமதி வாங்கிய பின்னரே அது தொடர்ந்தது.



தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால்சிறைபிடிக்கப்படும்போது, பிரதமர், உள்துறை அமைச்சர் அல்லது ஆளுநர் ஏதாவது ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பார்களா? ஆளுநர், தமிழ்நாடு தனித்து நிற்கிறது என்று கூறி, இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் ஒற்றுமையாக இருப்பது போலவும், தமிழ்நாடு மட்டும் துண்டிக்கப்பட்டு விட்டது போலவும் ஒரு மாயத்தோற்றத்தை தன்னுடைய பேட்டியின் மூலமாக உருவாக்க முயற்சிக்கிறார்.

இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களோடும் நல்ல உறவோடு இருக்கிறது என்பதை நிரூபிக்கும் வகையில், பஞ்சாப் முதல்வர், மேற்குவங்க முதல்வர், கேரளா முதல்வர், தெலுங்கானா முதல்வர் போன்ற பல மாநில முதல்வர்களையும் அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்திய மாநிலம் தமிழ்நாடு தான். இந்தியப் பிரதமர், குடியரசுத் தலைவர், ராணுவ அமைச்சர் போன்றவர்களையும் அழைத்து வந்து இங்கே நிகழ்ச்சிகளை நடத்தியதன் மூலம், தமிழ்நாடு இந்தியாவோடு இணைந்து இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்திய - சீன போர் வந்தபோது, திராவிட நாடு கொள்கை முக்கியமல்ல, இந்தியாதான் முக்கியம் என்று கொள்கையை விட்டுக்கொடுத்து இந்திய நலனைப் பெரிதாக மதித்த ஒரே அரசியல் கட்சி திமுக தான். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் நாங்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு பெயர்மாற்ற தீர்மானத்தின் போது ‘தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் நீங்கள் எதை இழக்கப் போகிறீர்கள்? வங்கத்துக்கோ குஜராத்துக்கோ யாருக்கும் இழப்பு கிடையாது. நாங்கள் எங்கள் தமிழ் மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்துக் கொள்கிறோம்’ என்று சொன்ன உரிமையை சட்டமாக நிறைவேற்றித் தந்தார்கள்.

**ராஜ்பவனுக்கு ஆட்சி அதிகாரம் கிடையாது!**

ஆளுநரின் அதிகாரம் குறித்துப் பேசிய அமைச்சர், ஆட்சி அதிகார மையம் ஒன்றுதான் இருக்க வேண்டும் என்றும், அது மாநில சட்டமன்றம் தான் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. ஆளுநர் டெல்லியில் இருந்து அனுப்பப்பட்ட ஒரு நபர் என்றும், ராஜ் பவனுக்கு ஆட்சி அதிகாரம் கிடையாது என்றும் கூறினார். ஆளுநர் மாநில அரசின் அமைச்சரவை முடிவுகளை ஒன்று ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; நிறுத்தி வைக்கின்ற உரிமை அவருக்கு கிடையாது, என்றார்.

துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்ட மசோதாவில் உச்ச நீதிமன்றம் கருத்து மட்டுமே சொல்லி இருக்கிறது, ஏப்ரல் எட்டாம் தேதி கொடுத்த தீர்ப்பிலே அவர்கள் எந்தத் தலையீடும் இடவில்லை. ஆளுநர் இனிவரும் காலங்களில் ஒப்புதல் அளிக்காமல் தாமதித்தால் சட்டத்தின் அவசியத்தைக் கருதி உடனடியாக உச்ச நீதிமன்றத்தை நாடி, மசோதாவின் மீது ஒப்புதலைத் தர வேண்டும் என்று கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இப்போது கிடைத்திரு க்கிறது. நீண்ட காலம் காலம் தாழ்த்தினால் நீதிமன்றத்தை நாடலாம் என்கின்ற கருத்து இருக்கிறதே தவிர, நிறுத்தி வைக்கலாம் என்கின்ற கருத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

**தமிழ்நாட்டின் கொள்கை இரு மொழிக் கொள்கை!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்தியை வைத்து மலிவான அரசியல் செய்ய வேண்டிய அவசியமே திமுக வுக்குக் கிடையாது. 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தது. தமிழ்நாட்டின் கொள்கை இருமொழிக் கொள்கைதான்; இங்கே யாரும் இந்தி படிக்க விரும்பவில்லை; விரும்புகிறவர்கள் எங்கே வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம், தடை இல்லை.

ஆளுநர், தமிழ் மொழியைத் தவிர மற்ற மொழிகள் எல்லாம் இங்கு வெறுக்கப்படுகின்றன என்றும், மொழிச் சிறுபான்மையினர் வீடுகளில் பேசுவதற்கே பயப்படுகிறார்கள் என்றும் கூறிய கருத்து தவறானது. தமிழ்நாட்டில் எந்த மொழிக்கும் அச்சுறுத்தல் என்பது கிடையாது. அது ஆளுநரின் கற்பனை.

**பி.எல்.ஓ.க்களின் தற்கொலை!**

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அதிவேகமாக நடைபெறுவதால் கவலை தெரிவித்த அமைச்சர், இந்த அவசர கதியிலான வேலைப்பளுவால் மன உளைச்சலுக்கு ஆளாகி பல்வேறு மாநிலங்களில் பல பிஎல்ஓக்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தம் தெரிவித்தார். 30 நாட்கள் போதாது, போதுமான கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாக்குரிமையை இழக்கக் கூடாது என்பதே அரசின் நோக்கம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ஆர்.ரகுபதி தெரிவித்தார்.

மேலும் நிரந்தர டிஜிபி நியமனம் குறித்த விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், பொறுப்பு டிஜிபி என்பதை அறிமுகப்படுத்தியவர்களே அதிமுகவினர் தான் என்றும், திரு ராமானுஜம் மற்றும் திரு ராஜேந்திரன் போன்றோர் அதிமுக ஆட்சியில் பொறுப்பு டிஜிபியாக நியமிக்கப்பட்ட உதாரணங்கள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டினார். நிரந்தர டிஜிபி நியமன த்திற்கான பட்டியல் வரும்போது, வேண்டப்படாத பெயர்கள் அனுப்பப்படுகின்ற பொழுது, அதில் சில மாற்றங்களைச் செய்து தாருங்கள் என்று கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இருக்கிறது. தேர்தல் ஆணையம் எல்லா அதிகாரங்களும் கொண்ட ஒரு ஆணையம், தேர்தல் காலத்திலே நிரந்தர டிஜிபி, தலைமைச் செயலாளர், அல்லது மாவட்ட ஆட்சியர் ஆகியோரை மாற்றுவதற்கு தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு என்றும் அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கினார்.

தங்கள் மீது எத்தனை கல்லடி பட்டாலும், அந்தக் கல்லடிகளை எல்லாம் வெற்றிப்படிகளாக மாற்றக்கூடிய சக்தி திமுகழகத்துக்கு உண்டு என்றும் அவர் பதிலளித்தார்.

### விக்கிரவாண்டி தொகுதி லட்சுமிபுரம் கிராமத்தில்

# கருமகாரிய கட்டிடம் கட்ட ரூ.6 லட்சம் நிதி ஒதுக்கீடு!

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. நடவடிக்கை!

*விக்கிரவாண்டி, நவ. 27-*

*விக்கிரவாண்டி அருகே ஓரத்தூர் ஊராட் சிக்குட்பட்ட லட்சுமிபுரம் கிராமத்தில் சுமார் 500 குடும்பங்களுக்கு மேல் வசித்து வரு கின்றனர்.இப்பகுதியில் வாழ்பவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். மேலும் இப்பகுதியில் வாழ்ந்து வரும் கிராம மக்கள் இறந்துவிட்டால் அவர்களை அடக்கம் செய்வதற்கும், எரியூட்டுவதற்கும் இடம் உள்ளது.*

*இறந்தவர்களின் கருமகாரியம் செய்வதற்கு அந்த கிராமத்தில் உள்ள குளத்து மேடு பகுதி.யில் உள்ள சிறிய இடத்தில் 40 ஆண்டுகளாக செய்து வந்துள்ளனர். அந்த இடமானது மிகவும் சிறியதாக வும், மேலும் உயரமான மேட்டு பகுதி என்பதாலும் வயதானவர்களும், மாற்றுத்திறனாளிகள் அங்கு சென்று இறந்தவர்களுக்கும், முன்னோர்களுக்கும் கருமகாரியம் செய்ய முடியாமல் அவதியடைந்துள்ளனர்.*

*இதனால் கடந்த சில ஆண்டுகளாக லட்சுமிபுரத்திலிருந்து, கஸ் பாகரணை கிராமத்துக்க்கு செல்லும் சாலை அருகே உள்ள மண் தரையில் உள்ள இடத்தில் தற் காலிகமாக கருமகாரியங்களை செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு லட்சுமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த தனம் அம்மாள் (95) என்பவர் வயது மூப்பின் காரணமாக இறந்து விட்டார். அவரது கருமகாரியம் நேற்று முன்தினம் நடைபெறுவதாக இருந்தது.*

*ஆனால் அன்றைய தினம் கனமழை அப்பகுதியில் பெய்ததால் லட்சுமிபுரம் கஸ்பாகரணை செல்லும் தார் சாலையிலேயே பந்தல் அமைத்து தரையில் பேனர்களை விரித்து கருமகாரியத்தை நடத்தினர். இதனால் இப்பகுதி பொது மக்கள் தங்களுக்கு நிரந்தரமாக கருகாரியம் நடத்துவதற்காகன கட்டிடம் வேண்டும் என கோரிக்கை விடுத்த னர்.*

*இந்த தகவலை அறிந்த விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா, அப்பகுதி அதிகாரிகளுடன் பேசி விரைவில் அப்பகுதியில் உள்ள இடத்தில் கருமகாரிய கொட்டகை கட்டுவதற் காக சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.6 லட்சம் நிதி ஒதுக்கீடுசெய்தார். இதனை அறிந்த அப்பகுதி கிராம மக்கள் எம்.எல்.ஏ.வுக்கு பாராட்டுகளை தெரிவித்தனர்.*


சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம் பைத்தூர் ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் படிவம் நிரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்காளர்களிடம் பெறப்பட்ட படிவத்தை பதிவேற்றும் பணிகளை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தே.மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர் இரா. வரதராஜன், ஏ.ஏ.ஆறுமுகம், ரவி, சந்திரமோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மணப்பாறை இரா. வீராசாமி**

**நவம்பர் 27 (2010)**



**மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**